க்ருத்திகா தீபோத்ஸவம் எப்படி அனுஷ்டிப்பது என்றும் ஸ்ரீ சுண்டபாளையம் ராமபத்ராசார்யர் ஸ்வாமி சுருக்கமாகக் காட்டியுள்ளார். அதன் தமிழாக்கம் தரப் படுகிறது.

**க்ருத்திகா தீபோத்ஸவ ஆராதன ப்ரயோக:**

அன்று சாயம் காலம் முறைப் படி தீர்த்தமாடிவிட்டு பெருமாள் ஸன்னிதிக்குச் சென்று க்ருத்திகா தீபோத்ஸவாங்கம் பகவத் ஆராதநம் கரிஷ்யே என்று சங்கல்பித்து வழக்கம் போல் ஆராதனம் செய்து தூப தீபாதிகளால் அர்ச்சித்து பொரி முதலியவைகளை நிவேதனம் செய்து ஏழு வைஷ்ணவ மந்த்ரங்களாலும் விஷ்ணு காயத்ரியினாலும் தீபங்களை பெருமாளுக்கு சமர்ப்பிக்க வேண்டும். வழக்கம் இருந்தால் அப்போது - அக்நிர் ந: பாது க்ருத்திகா:, நக்ஷத்ரம் தேவம் இந்த்ரியம், இதம் ஆஸாம் விசக்ஷணம், ஹவிராஸஞ்ஜுஹோதந, யஸ்ய பாந்தி ரஶ்மயோ யஸ்ய கேதவ:,யஸ்யேமா விஶ்வா புவநாநி ஸர்வா, ஸ க்ருத்திகாபி ரபி ஸம்வஸாந:, அக்நிர் நோ தேவ: ஸவிதா ததாது, என்று இந்த எட்டு வாக்யங்களால் அக்நிக்கு ஆத்மாவான பகவானுக்கு மஹாதீப நீராஜனம் சமர்ப்பிக்க வேண்டும். தாம்பூலாதிகளை சமர்ப்பித்து ஆராதனத்தை பூர்த்தி செய்வதாம்.

(மேற்கண்ட வாக்யங்களில் சில விளக்கங்கள். தீபோத்ஸவ ஆராதனத்தில் ஸ்நாநாஸநம் கிடையாது. அலங்காராஸனத்தில் மந்த்ர புஷ்பத்தோடு தீபத்தை சமர்ப்பிக்கலாம். போஜ்யாஸனத்தில் பொரி சமர்ப்பிக்கலாம். இதுவும் பெரியோர்கள் வழி. அல்லது இங்கு கண்டுள்ளவாறு போஜ்யாஸனத்தில் பொரி சமர்ப்பித்து புநர் மந்த்ராஸனத்தில் தீபம் சமர்ப்பிக்கலாம். ஏழு வைஷ்ணவ மந்த்ரங்களாவன- *விஷ்ணோ ரராடமஸி, விஷ்ணோ: ப்ருஷ்டமஸி விஷ்ணோ: ஶ்நப்த்ரேஸ்தோ விஷ்ணோஸ்ஸ்யூரஸி, விஷ்ணோர் த்ருவமஸி வைஷ்ணவமஸி விஷ்ணவே த்வா-)*